சுருக்கம்

சீராய்வு மனு – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம் – நகலூர் கிராமம் – புல எண்.564/3 – நிலவியல் கால் பாதை ஆக்கிரமிப்பு – திரு மா.வீரன் அவர்கள் அரசுக்கு சீராய்வு மனு – தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில முடிவு அலகு (நிமு.6(2)) பிரிவு

அரசாணை (நிலை) எண்.57

நாள் 23.01.2020
விகாரி வருடம், தை 9
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கவும்

1. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறைகள் ந.க.26095/2016/ஊ2, நாள் 22.1.2017.
2. திரு மா. வீரன், ஈரோடு மாவட்டம் அவர்களின் சீராய்வு மனு நாள் 30.4.2018.
3. அரசு கடித எண்.15894/நிமு.6(2)/2018–1, நாள் 23.8.2018.
4. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு கடிதம் ந.க.26095/2016/ஊ2, நாள் 3.11.2018.

---------

ஆணை:–

ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த திரு மா.வீரன் அவர்கள் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறையை இரத்து செய்யக் கோரி அரசுக்கு சீராய்வு மனு அளித்துள்ளார்.

2. இந்நேர்வு தொடர்பாக ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தனது செயல்முறைகள் ந.க.26095/2016/ஊ2, நாள் 22.1.2017–ன்படி திரு மா. வீரன் அவர்களின் மனுவை தள்ளுபடி செய்து, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், புல எண்.564/3 நிலவியல் கால்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிட்டார்.

3. மேற்காணும் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறையினை ரத்து செய்ய கோரி, மனுதாரர் திரு மா.வீரன் அவர்கள் அரசுக்கு சீராய்வு மனு செய்துள்ளார். மேற்காணும் மனுவின் மீது அறிக்கையினை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளார்.

4. ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், புல எண்: 564/3-ல் 0.04.50 ஹெக்டேர் நிலவியல் கால்பாதையை அழித்து மேற்படி கிராமத்தைச் சேர்ந்த திரு.வீரன், த/பெ.மாரன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அப்பாதை உள்ளே உள்ள கோவில்களுக்கு செல்லும் பாதை என்றும், எனவே, மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றித் தருமாறும் கோரி ஊர் பொதுமக்கள் அளித்த மனுவின் பேரில், அந்தியூர் வட்டாட்சியரால் மேற்படி கிராமம் ரீ.ச. 564/3-ல் 0.04.50 ஹெக்டேர் புலத்தில் நிலவியல் கால்பாதை என கிராமக் கணக்குகளில் தாக்கலாகி உள்ளதாலும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாலும் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்க முடியாது என்பதாலும் மேற்படி கால்பாதை தொடர்பான திரு. வீரன் என்பவரின் கோரிக்கையினை நிராகரித்தும் ஆக்கிரமிப்பு

Scanned with CamScanner

அகற்ற தொடர் நடவடிக்கை தொடரவும் அத்தாணி நிலவருவாய் ஆய்வாளருக்கு உத்தரவிடப்பட்டது.

5. அந்தியூர் வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து, கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியரிடம் திரு.வீரன், த/பெ.மாரன் என்பவர் மேல்முறையீடு செய்ததின் பேரில், நடவடிக்கை மேற்கொண்டு அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம் ரீ.ச. எண். 564/3-ல் 0.04.50 ஹெக்டேர் பட்டா எண். 730-ன் படி நிலவியல் கால்பாதை நிலவரித்திட்ட (RSR) பதிவேட்டில் வீ. ராமனும் மற்றும் 4 நபர்கள் எனவும் 10(1) சிட்டாவின்படி பட்டா எண். 730-ன் படி வீரன் மகன் ராமன் மற்றும் 12 நபர்களுக்கு பாத்தியப்பட்டது என பதிவாகியுள்ளது எனவும் ரீ.ச. எண் 564க்குரிய புலவரைபடத்தில் நிலவியல் கால்பாதையை விளக்கியாகவும் பதிவாகியுள்ளது.

6. அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், புல எண்: 564/3 என்பது நிலவியல் கால்பாதை என கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது எனவும், நிலவியல் கால்பாதை என்பது பட்டா நிலமாக இருப்பினும் கால்பாதையாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும், அதில் வீடு கட்டியோ, சாகுபடி செய்தோ தடை செய்யக் கூடாது எனவும், மனுதாரர் மேற்படி ரீ.ச. எண்:564/3 என்பது நிலவியல் கால்பாதையில் மக்காச்சோளம் சாகுபடி செய்து ஆக்கிரமிப்பு செய்திருப்பது தவறான செயலாகும் என்பதால் மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்தும், அந்தியூர் வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ஊர்ஜிதம் செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

7. நில அளவைத்துறை உதவி இயக்குநர் அளித்த அறிக்கையில் அந்தியூர் வட்டம், அத்தாணி உள்வட்டம், நகலூர் கிராமம், ரீ.ச.564/3 ஆனது மறு நில அளவையின் போது நிலவியல் கால்பாதை என பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி புல எண் 564/3க்கு சார்பாவது பழைய நில அளவை எண்:59-பி, மற்றும் 63 எனவும், இவை பழைய நிலஅளவையின் போது தனி நபர்கள் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், பழைய 'அ' பதிவேட்டில் பாதை குறித்த பதிவுகள் ஏதும் இல்லை எனவும், மேலும், மறுநிலஅளவைக்கு முந்தைய புலப்படங்கள் மற்றும் பழைய கிராம வரைபடங்கள் ஆகியவற்றை பரிசீலித்ததில் மேற்படி பாதை குறித்த பதிவுகள் ஏதும் இல்லை எனவும், ஆனால், 564/3-க்கான மறு நிலஅளவை வரைபடத்தில் மேற்படி பாதை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், மறுநிலஅளவைப்பணி மேற்கொள்ளும் போது மேற்படி பாதையானது நிலையில் இருந்ததால் மறு நிலஅளவை புல வரைபடங்கள் மற்றும் கிராம வரைபடங்களில் மேற்படி பாதை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி மறுநிலஅளவைப்பணி முடிவுற்று சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாகிறது எனவும், எனவே ஆக்கிரமிப்பு அகற்றக் கோரிய நிலவியல் கால்பாதையானது சுமார் 45 ஆண்டுகளாக கிராம ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், ஆனால், மறு நிலஅளவைக்கு முந்தைய ஆவணங்களில் மேற்படி பாதை குறித்து பதிவுகள் ஏதும் இல்லை எனவும், தெரிவித்துள்ளார்.

8. கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியரின் உத்தரவினை எதிர்த்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 22.08.2016-ல் மனு செய்துள்ளார் இம்மனுமீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட ந.க.26095/2016/ ஊ2 நாள் : 22.01.2017 உத்தரவில் அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், ரீ.ச.எண் 564/3-ல் 0.04.50 ஹெக்டேர் விஸ்தீரண பரப்புள்ள பூமியானது நிலவியல் கால்பாதை என கிராம ஆவணங்களில் தனி உட்பிரிவு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிராமம், பட்டா எண் 730-ன் படி மாரன் மகன் திரு.வீரன் மற்றும் 12 நபர்களின் பெயர்கள் கிராம சிட்டாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் நிலையாணை எண் 26(15)-ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

"Encroachment on plan-marked details:-- A plan-marked channel or pathway running in a patta land is a Government land. Eviction of encroachments in such lands need be invoked only in cases where the encroacher has interfered with the plan marked detail so as to close its entrance to and exit from his lands. In the case of pathways and cart tracks which have been used by the public till recently, the ryot should not be allowed to shift the course of the details to suit his own convenience. However, such diversions of plan marked channel from its original course, with a view to consolidate his holding or to facilitate irrigation of the portions which would be otherwise severed need not be treated as encroachment."

9. மேற்படி வருவாய் நிலையாணையின் படி, பட்டா நிலத்தில் கால்பாதை விளக்கியாக காட்டப்பட்டிருந்தாலும், அவை அரசு நிலமாகக் கருதி அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. எனவே, நிலவியல் வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டம், 1905-ன் படி சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும், சார்நிலை அலுவலர்களின் வாக்குமூலம் மற்றும் கருத்துருக்களின் படி மேற்படி நிலவியல் கால்பாதை கோயில்களுக்குச் செல்லும் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வருவது தெரிய வருகிறது.

10. எனவே, அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், ரீ.ச.எண் 564/3-ல் 0.04.5 ஹெக்டேர் பரப்பில் உள்ள நிலவியல் கால்பாதை தொடர்பான, நகலூர் கிராமம், திரு.வீரன் த/பெ.மாரன் என்பவர் தாக்கல் செய்துள்ள சீராய்வு மனு தள்ளுபடி செய்தும்,கால்பாதையாகவுள்ளதை மக்கள் பயன்படுத்துவதை தடை செய்யக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

11. இவ்வுத்தரவினை எதிர்த்து திரு. வீரன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு WP 3993/2017 வழக்கில் 28.02.2018 நாளன்று பகரப்பட்ட தீர்ப்புரையில் "this court holds that it is open for the petitioner to approach the Government by way of revision within two weeks from the date of receipt of a copy of this order, and he shall also file necessary petition for interim order a long with the said revision. If such a revision is mede, it is open for the Government to consider the same on merits and in accordance with law, and pass appropriate orders with in two weeks therafter, after hearing the parties concerned, including the complainant, if any.

With the above observations and directions, the writ petition is disposed of. no costs. consequently, W.M.P. is closed" என தெரிவித்து தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. மேற்படி தீர்ப்புரையில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் அரசுக்கு சீராய்வு மனு செய்துள்ளார்.

12. மேற்காணும் சூழ்நிலையில், மனுதாரர் திரு மா.வீரன் அவர்கள் மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம் அவர்களின் 22.1.2017ம் நாளிட்ட செயல்முறையினை ரத்து செய்ய கோரி அரசுக்கு அளித்த சீராய்வு மனு மீதான நேரடி விசாரணைக்கு 9.1.2019 அன்று முதன்மைச் செயலாளர் முன்பு ஆஜராகுமாறு மனுதாரர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மனுதாரர் 9.1.2019 அன்று நேரடி விசாரணனைக்கு ஆஜராகி தனது எழுத்து பூர்வ வாதத்தை அரசுக்கு அளித்தார். தனது எழுத்துபூர்வ வாதத்தில் மனுதாரர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அ. வருவாய் நிலை ஆணை எண்.26(15)—யை குறிப்பிட்டு பட்டா நிலத்தில் கால்பாதை இருப்பின் அது அரசு நிலம் என்பதாக தவறாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அந்த நிலை ஆணையில் "However such diversions of plan marked channel from its original course, with a view to consolidate his holding or to facilitate irrigation of the portions which would be otherwise served need not be treated as

Scanned with CamScanner

encroachment" என்று குறிப்பிட்டுள்ளதை மேற்குறிப்பிட்டுள்ள வருவாய் துறை அலுவலர்கள் கவனிக்க தவறிவிட்டனர். புல எண்.564 நிலத்தின் உரிமையாளர்கள் மட்டுமே அங்கு குடிசைகள் அமைத்து குடியிருந்து வந்தனர். அங்கு அவர்கள் சிறிய கோயிலை கட்டி தனிப்பட்ட முறையில் பராமரித்து வருகின்றனர். அக்கோயில் பொது நபர்கள் வழிபடும் கோயில் அல்ல. மேற்குறிப்பிட்ட நில உரிமையாளர்கள் மட்டும் அக்கோயிலை வழிபட்டு வருகிறார்கள்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே விவசாய நிலத்தில் இருந்த குடிசைகளை அகற்றிவிட்டு அருகில் உள்ள நத்தம் நிலத்தில் நாங்கள் வீடுகள் கட்டி குடியேறிவிட்ட நிலையில் அந்த கால்பாதை பயனற்று போய் விவசாய நிலத்தோடு சேர்க்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள நபர்கள் தங்களுடைய வேறு நிலத்தின் செல்ல புல எண்.564–ல் உரிமை ஏற்படுத்த முயற்ச்சித்ததை தடுத்தபோது சீராய்வு மனுதாரர் கால்பாதையை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாகவும், ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என மனு செய்ததை வருவாய் துறையினர் ஏற்றுக்கொண்டது சட்டத்திற்கு புறம்பானதாகும்.

தனிநபர்கள் மற்றொருடைய நிலத்தில் பாதை உரிமையை, உரிமையின் அடிப்படையில் (title) மட்டுமே கோர முடியும். அது வசதியுரிமையின் (Easement right) அடிப்படையிலும் இருக்கலாம். அது மறுக்கப்படும்பொழுது உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உரிமையை சட்டப்படி நிலை நாட்டிக்கொள்ள வேண்டும். ஆனால் அந்தியூர் வருவாய் வட்டாட்சியர் அத்தனிநபர்களின் விண்ணப்பத்தை பொதுமக்கள் விண்ணப்பமாக தவறாக ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதை சார் ஆட்சியரும், மாவட்ட ஆட்சியரும் சரியான முடிவு என தவறாக உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஆ. புல எண்.564–ல் உள்ள நிலம் தனக்கும், தன்னுடைய கூட்டு பட்டாதாரர்களுக்கும் மட்டுமே உரிமையானதாகும். மற்ற கூட்டு பட்டாதாரர்கள் யாரொருவரும் பட்டா நிலத்தில் கால்பாதை உரிமை கோரவில்லை. ஆனால் வட்டாட்சியர் முதற்கொண்டு மாவட்ட ஆட்சியர் வரையிலான அலுவலர்கள் அதை பொதுப்பாதையென தவறான முடிவெடுத்துள்ளனர்.

இ. புல எண்.564/3–ல் தற்பொழுது பாதை எதுவும் இல்லை. ரீ.சர்வேயின் போது அங்கு பாதை இருந்ததால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வாறான பாதை எதுவும் அங்கு இல்லாத நிலையில் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதாக வருவாய்த் துறை அலுவலர்கள் தவறாக முடிவு செய்துள்ளனர்.

ஈ. மாவட்ட ஆட்சியரின் உத்தரவில் ஏற்றுக்கொள்ள கூடிய காரணம் (Reasoning) எதுவும் இல்லை.

உ. கிராம நிர்வாக அலுவலரும், வருவாய் ஆய்வாளரும் ரீ.சர்வே ஆவணங்களின் அடிப்படையில் அறிக்கை அளித்துள்ளனர். அவர்கள் புலத்தை ஆய்வு செய்யவில்லை. நில அளவை உதவி இயக்குநர் அறிக்கையில் 564 புலத்தின் பழைய புல எண்.59–b மற்றும் 63 எனவும், அந்த ஆவணங்களில் கால்பதை குறித்து எதுவும் இல்லை எனவும், ரீ.சர்வேயில் பொது கால்பாதை என பதிவாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே அந்த கால்பாதையானது தற்காலிகமானது என்பதை கீழ்நிலை வருவாய்த் துறை அலுவலர்கள் கவனிக்க தவறிவிட்டனர்.

Scanned with CamScanner

ஊ. வருவாய் வட்டாட்சியரின் நடவடிக்கைகள் எந்த விதிமுறைகளின் கீழ் முறையானவை என்பது பற்றி சார் ஆட்சியரும், மாவட்ட ஆட்சியரும் அவர்களுடைய உத்தரவில் விபரம் எதுவும் குறிப்பிடவில்லை. எனவே சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் உத்தரவுகளில் Reasoning / Justification எதுவும் இல்லததால் அவர்களுடைய முடிவு Perverse ஆனதாகும். எனவே அது ரத்து செய்யப்பட வேண்டியதாகும்.

எ. கூட்டுப்பட்டாதாரர்களாகிய தங்களுக்கு இடையே அந்நிலத்தை அனுபவிப்பதில் பிரச்சனை ஏதுமில்லை. பட்டாதாரர்கள் யார் ஒருவரம் வட்டாட்சியரை அணுகவில்லை. மாறாக மூன்றாம் நபர்கள் தனியார் நிலத்தில் தட உரிமை கோரி மனு செய்ததாக அதன் பேரில் நடவடிக்கை எடுத்தது முறையற்றதாகும். இது உரிமையியல் பிரச்சனையாகும். அப்பிரச்சனை உரிமையியல் நீதிமன்றத்தில் முடிவு செய்யவேண்டியதாகும். மாவட்ட ஆட்சியரின் முன்னிலைக்கு இது குறித்த விபரம் எடுத்துரைக்கப்பட்டும் அதை முறையாக பரிசீலிக்காமல் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

ஏ. மேலும் கீழ்நிலை வருவாய் துறை அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட நிலத்தின் ஒரு பட்டாதாரராகிய தனக்கு எதிராக மட்டும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். இதர பட்டாதாரர்களிடம் இது பற்றி எவ்வித விசாரணையும் செய்யவில்லை. இது கீழ்நிலை வருவாய் துறை அலுவலர்களின் தவறான அணுகுமுறையை காட்டுகிறது. மேலும் கீழ்நிலை வருவாய் துறை அலுவலர்கள் பொதுமக்கள் மனு செய்ததாக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். ஆனால் உண்மையில் மேற்குறிப்பிட்டுள்ள தனிபட்ட நபர்கள் தவிர பொதுமக்கள் யாரொருவரும் தங்கள் நிலத்தில் பயன்பாட்டுரிமை கோரவில்லை என தெரிவித்து மாவட்ட ஆட்சியரின் 22.1.2017ம் நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய கேட்டுக்கொண்டுள்ளார்.

13. மேற்படி மனுதாரரின் எழுத்துப்பூர்வ வாதத்தின் மீது மாவட்ட ஆட்சியர் தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளார்.

14. இந்நிலையில் மனுதாரரின் சீராய்வு மனுவானது, மாவட்ட ஆட்சியரின் அறிக்கை, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கீழ்கண்டவை கண்டறியப்பட்டுள்ளன:–

**(i) வருவாய் நிலையாணை எண்.26(15)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**"Encroachment on plan-marked details:--**

**A plan-marked channel or pathway running in a patta land is a Government land. Eviction of encroachments in such lands need be invoked only in cases where the encroacher has interfered with the plan marked detail so as to close its entrance to and exit from his lands. In the case of pathways and cart tracks which have been used by the public till recently, the ryot should not be allowed to shift the course of the details to suit his own convenience. However, such diversions of plan marked channel from its original course, with a view to consolidate his holding or to facilitate irrigation of the portions which would be otherwise severed need not be treated as encroachment."**

Scanned with CamScanner

மேற்படி வருவாய் நிலையாணையின் படி, பட்டா நிலத்தில் கால்பாதை விளக்கியாக காட்டப்பட்டிருந்தாலும், அவை அரசு நிலமாகக் கருதி அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

(ii) இந்நேர்வில் நிலவியல் கால்பாதை என்பது பட்டா நிலமாக இருப்பினும் நிலவியல் கால்பாதை என கிராம ஆவணங்களில் தனி உட்பிரிவு செய்யப்பட்டு நிலவியல் கால்பாதையாக சுமார் 45 ஆண்டுகளாக கிராம ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) அந்தியூர் வட்டம், நகலூர் கிராமம், புல எண்.564/3 புலம் தொடர்பாக விசாரணை மற்றும் அறிக்கைகளின் அடிப்படையில் ரீ.ச.564/3 நிலவியல் கால்பாதை வழியாக ரீ.ச.527/1—ல் உள்ள பழனியாண்டவர் கோவில் மற்றும் அதில் உள்ள விவசாய பூமிக்கு அதில் பாத்தியமுள்ள இந்து – அருந்ததியர் சென்று வந்துள்ள நிலையில் ரீ.ச. 564/3—ன் பட்டாவில் இடம் பெற்றுள்ள திரு வீரன் உட்பட கூட்டு பட்டாதாரர்கள் ரீ.ச.564/3 கால்பாதையில் ஆக்கிரமிப்பு செய்து அதில் சென்று வர இயலாமல் தடுத்துள்ளதும், தற்போது ரீ.ச.564/3—ன் தெற்கு புற எல்லையில் ரீ.ச.527/1—ல் வடக்கு முனையில் **fencing** போட்டுள்ளதாலும், மேற்படி ரீ.ச.564/3—ன் வழியாக சம்பந்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சென்றுவர இயலாமல் உள்ளதும், மேற்படி ரீ.ச.527/1—ன் காலைக்கு வேறுபாதை ஏதும் இல்லாத நிலை உள்ளதும் புலனாகிறது.

15. மேற்கண்ட கண்டறிதல்களின் அடிப்படையிலும், மனுதாரர் திரு மா. வீரன் அவர்கள் மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம் அவர்களின் 22.1.2017ம் நாளிட்ட செயல்முறையினை ரத்து செய்ய கோரி அரசுக்கு அளித்த சீராய்வு மனுவில் புதிய வலுவான காரணங்கள் மற்றும் ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்பதாலும், மனுதாரரின் சீராய்வு மனுவினை தள்ளுபடி செய்யலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**Dr.** அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

திரு மா. வீரன்,
த/பெ. மாரன்,
வீரனூர், நகலூர் கிராமம்,
அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.
(மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மூலமாக சார்வு செய்ய)

நகல்

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்/
நில நிருவாக ஆணையர் (மு.கூ.பொ) அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை—600 005.
✓ மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம்.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கே.எஸ்.ஆனந்த் பிரகாஷ் 23/01/2020
பிரிவு அலுவலர்
23/1/2020

Scanned with CamScanner